தீபகத்திலிருந்து…

இறையாசீர்

உயிர்ப்பின் காலத்தின் உச்சக்கட்டத்தை நெருங்கியுள்ளோம். கிறிஸ்து அப்போஸ்தலர்களோடு வாழ்ந்துப் பாடுபட்டு இறந்து உயிர்த்திருந்தாலும் இந்நிகழ்வுகள் அனைத்தின் பொருளையும் சீடர்கள் முழுமையாக உணரவில்லை. தூய ஆவியானவரின் வருகையே அவர்களது கண்களைத் திறந்து அவர்களது நம்பிக்கைக்கு உயிர்க்கொடுத்தது என்று கூறின் அது மிகையாகாது.

உயிர்ப்பின் மக்கள் ஆவியின் மக்களாவர், ஏனெனில் உயிர்ப்பின் நிறைபலனை நாம் முழுமையாய் உணரச்செய்யபவர் தூய ஆவியே. தந்தைக்கும் மகனுக்கும் இடையே உள்ள ஆழ்ந்த உறவின் வெளிப்பாடாம் ஆவியின் மக்களாய் நாம் வாழ்வது என்பது உறவின் மக்களாய் வாழ்வதற்கான அழைப்பாகும். நம் உறவுகள் உண்மையானவையாய் உருவாகும்போது, உருவான உறவுகள் அன்பிலே மேம்படும்போது, தன்னலம் நாடாத நிலையை நோக்கி வளரும்போது, ஆவியின் மக்களாய் நாம் உருவாகின்றோம் என்பது தெளிவாகின்றது. இந்த உறவுகளுக்கெல்லாம் அழகானதொரு எடுத்துக்காட்டு நாம் இம்மாதம் நினைவுக்கூறும் மற்றொரு மறையுண்மை: மூவொரு இறைவன் இறைத்தந்தையைப் போல இரக்கமுள்ளவராய் வளர நம்மை அழைக்கும் இவ்வாண்டிலே இம்மாதம் நமக்கு முன்னிறுத்தும் மாதிரி மூவொரு இறைவன்.

தந்தை, மகன், தூய ஆவி என்னும் இம்மறையுண்மை நமக்கு தரும் சவால் நமது உறவுகள் எப்படிப்பட்டவையாய் உள்ளன என்று சீர்த்தூக்கிப் பார்ப்பதே. உண்மையான, தன்னலமற்ற, தான் என்ற அகந்தையற்ற, ஆதாயம் தேடாத, விட்டுக்கொடுக்கின்ற, மன்னிக்கின்ற, எந்த எதிர்ப்பார்ப்புமற்ற உறவுகளாய் எனது உறவுகள் இருக்கின்றனவா என்று சிந்தித்துப் பார்ப்போம்.

மூவொரு இறைவனை வணங்கும் நாம் இவ்விறைவனின் இயல்பு அறிந்து அவ்விறைவனுக்கு ஏற்ற மக்களாய் இரக்கமுள்ள உறவுகளில் ஊன்றி வளர்வோம். உறவுகளின் ஊற்றாம் ஆவியானவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

அன்புடன்

பணி. அந்தோணி கிறிஸ்டி

## பகுதி -1: வழிபாட்டு வழிகாட்டி

| | |
|---|---|
| 01.05.2016 | தொழிலாளர் தினம் - திருப்பலி |
| 03.05.2016 | தூய பிலிப்பு, யாக்கோபு திருவிழா - திருப்பலி |
| 08.05.2016 | ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழா- திருப்பலி |
| 13.05.2016 | புனித பாத்திமா அன்னை - திருப்பலி |
| | தூய ஆவியின் கொடைகளுக்காக நவநாள் |
| 15.05.2016 | தூய ஆவி பெருவிழா - திருப்பலி |
| 22.05.2016 | மூவொரு கடவுள் பெருவிழா - திருப்பலி |
| 24.05.2016 | கிறிஸ்தவர்களின் சகாய அன்னை திருவிழா - திருப்பலி |
| 29.05.2016 | கிறிஸ்துவின் திருவுடல் திருரத்தம் பெருவிழா - திருப்பலி |
| 31-05-2016 | அன்னை மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தல் திருவிழா - திருப்பலி |

## பகுதி -2: விசுவாசத்தில் வளர...

தூய ஆவியின் கொடைகள்

கிறிஸ்தவர்களின் சகாய அன்னை பக்தி

இரக்கத்தின் ஆண்டிற்கு மூவொரு இறைவன் தரும் பாடங்கள்

திருச்சபை செய்திகள்

## பகுதி -1: வழிபாட்டு வழிகாட்டி

**01.05.2016 தொழிலாளர் தினம் திருப்பலி**

திருமதி ராணி வில்சன்

முன்னுரை

மார்ச் 19தான் புனித வளனார் விழா. அவர் ஒரு தொழிலாளி என்பதையும் அவர் எப்படி நமக்கெல்லாம் முன்னுதாரணமாக வாழ்ந்தார் என்பதையும் திருமறை நமக்குத் தெரிவிக்கிறது. ஆகவே திரு அவை இவரை மையமாக வைத்துத் தொழிலாளர் தினத்தைக் கொண்டாட நம்மை அழைக்கிறது. இதனைக் கொண்டாட அறிவித்தவர் திருத்தந்தை 12ம் பத்திநாதர் "தொழிலாளரானப் புனித சூசை" என அறிவித்தார்.

சான்றோன், நீதிமான், இறைதிரு உள்ளத்திற்குப் பணிந்து நடப்பவர், இறை இயேசுவுக்கு வளர்ப்புத் தந்தை, அன்னை மரிக்குக் கணவன், திருஅவை முழுவதுக்கும் பாதுகாவலர், நல்ல இறப்புக்கும் பாதுகாவலர். இப்பேர்பட்டப் புனிதர் இத்திருநாளுக்கு மையமானதில் வியப்பில்லை. உடலின் தேவைக்காகவும், குடும்ப வளர்ச்சிக்காகவும் மனிதன் உழைப்பில் ஈடுபடும்போது படைத்தவனின் வேலையைத் தொடர்ந்து நடத்துகிறான் என்பதை உணர வேண்டும். இந்த உழைப்பு மனிதச் சமூகத்திற்கு நல்கும் தொண்டு, இப்பணி மூலம் தெய்வீகத் திட்டம் மனித வரலாற்றில் நிறைவேற மனிதன் ஒத்துழைக்கிறான்.

ஆனால் இன்று போராடிப் பல உயிர்களைப் பலிகொடுத்து பெற்ற 8மணி நேரம் வேலை கிடைக்க உரிமைகள், குறிப்பாக அமைப்பு சாரா தொழிலாளர்களின் மோசமான நிலைமை பெண் தொழிலாளி, விவசாய கூலிகளுக்கு குறைவான ஊதியம், இப்படி பல அடக்கு முறைகள் நடக்கின்றது. அநீதிகளெல்லாம் ஒழிய, சமத்துவம் ஓங்க தொழிலாளர் நிலை உயர இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, இரவு பகல் பாராது எம் தாயாம் திருஅவைக்காக உழைக்கும் எம் திருஅவை தலைவர்களையும் மற்றும் அனைத்து இருபால் துறவு சகோதர சகோதரிகளையும் பாதுகாத்து ஆசீர்வதித்து வழி நடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, இறைத்திட்டம் நிறைவேற உழைக்கும் மக்களுக்கு உற்சாகம் தர ஊக்கம் தர பல்வேறு விதங்களில் பொதுநிலையினர் நற்செய்தி பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களையும் உமது அருளாலும் ஆசிராலும் இரக்கத்தாலும் அணைத்துக் கொள்ள வேண்டிய உதவிகளைச் செய்திட உம்மை மன்றாடுகிறோம்.

3. ஒளியான, வழியான இறைவா, உழைக்கும் அனைத்து ஆண் பெண் மக்களை உம் கரத்தில் ஒப்புக்கொடுக்கிறோம். மழையென்றும் வெயிலென்றும் பாராது உழைக்கும் அவர்களுக்கு அரசிடமிருந்து கிடைக்கும் அனைத்து உரிமைகளும் கிடைத்து நலமாக வளமாக வாழ அருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**03.05.2016 தூய பிலிப்பு, யாக்கோபு திருவிழா திருப்பலி**

திரு. ஜான் சுரேஷ்

முன்னுரை

இறை இயேசுவில் இனியோரே, நம் தாய் திருச்சபையானது இன்று இயேசுவின் திருத்தூதர்களான தூய பிலிப்பு மற்றும் யாக்கோபு ஆகிய இருவரின் விழாவைக் கொண்டாட அழைப்பு விடுக்கிறது. தூய பிலிப்பு இயேசுவின் சீடர்களுள் ஒருவர், இவர் திருமணமானவர். இயேசு உயிர்த்தப் பிறகு மற்ற திருத்தூதர்களைப்போலவே நற்செய்தி அறிவிக்கப் புறப்பட்ட பிலிப்பு 20 ஆண்டுகள் சைத்திரியாவில் போதித்தார். அல்பேயு மற்றும் மரியாவின் மகன் யாக்கோபு இவர். தான் எருசலேமின் முதல் ஆயராக இருந்தார் என்பது தொடக்கத் திருச்சபையின் நம்பிக்கை. வரலாற்று ஆசிரியரான யுசேபியஸ் இவரை நீதிமான் என்றுரைத்தார். பிலிப்பு யாக்கோபுவின் இறை நம்பிக்கையை நாமும் பெற்று ஆண்டவருக்குச் சான்று பகர்ந்திட வரம்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அனைத்துலகின் ஆண்டவரே, தூய பிலிப்பு மற்றும் தூய யாக்கோபு போன்று உலகிற்கு உமது வார்த்தைகளை அறிவிக்க உழைக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் ஆசீர்வதித்து அவர்களின் ஆன்ம பாதுகாவலராக இருந்து சோதனையிலிருந்து இவர்களைப் பாதுகாத்திட வேண்டுமென்று இவ்விரு புனிதர்கள் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நீ இளைஞனாய் இருக்கும்போதே கடவுளைத் தேடு என மொழிந்த இறைவா, கணிணி உலகத்தில் வாழும் எம் இளைஞர்கள் இளம் பெண்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் தங்கள் வாழ்வில் நல்லது எது? கெட்டது எது என உய்த்துணர வேண்டி இவ்விரு புனிதர்கள் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. ஒளிமயமான இறைவா, பலவித எதிர்பார்ப்புகளோடும், ஏக்கங்களோடும் துன்ப துயரங்களோடும் வந்திருக்கும் எங்கள்மேல் உமது கருணைக் கண்களைத் திருப்பியருள வேண்டுமென்றும் இவ்வுலகத் தீமைகள், கடன் தொல்லைகள், வறுமை, பிணி போன்ற துன்பங்களிலிருந்து விடுதலைப்பெற்று புதுவாழ்வு வாழவும் அருள்தர வேண்டுமென்று இவ்விரு புனிதர்கள் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. பாதுகாக்கும் இறைவா, எல்லாவற்றிலும் ஆதாயம் ஒன்றையே கருதிக் கொண்டிருக்கும் இந்த அரசியல் பொறுப்பாளர்கள் மக்களின் நலமே நாட்டின் நலன் என்ற கொள்கையை மனதில் கொண்டு தாம் வகித்து வரும் பொறுப்புகளை நேர்மையான முறையில் நிறைவேற்றிட வேண்டிய மனமாற்றத்தை தருமாறு இவ்விரு புனிதர்கள் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**08.05.2016 ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழா திருப்பலி**

திரு ஜீசஸ் மகுட மன்னன்

முன்னுரை

நீங்கள் என் சாட்சிகள் வாழ்வினில் காட்டுங்கள்

வாரத்தின் முதல் நாளாகிய அன்று மாலை வேளையில் சீடர்களிடையே மாடி அறையில் வந்து நின்ற அதே கிறிஸ்து சீடர்கள்மேல் ஊதி "தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள், எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா" என்றுரைத்த கிறிஸ்துவை மையம் கொண்டுள்ளது. உயிர்ப்பு விழாவின்போது, திருஅவை அறிக்கையிடும் பாடல், சக்கரியாவின் மனைவியான எலிசபெத்தை மரியா சந்தித்த வேளையில் "தலைமுறைத் தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்" என்று பாடிய சொற்களை எதிரொலிக்கின்றது. வாக்கு மனிதரான நொடியிலிருந்தே மீட்பு வரலாற்றில் நிகழ்ந்தப் புதியதொரு திருப்பத்தை இச்சொற்கள் வெளிப்படுத்துகின்றன.

இயேசு கிறிஸ்து விண்ணகத் தந்தையின் வலப்பக்கத்தில் எல்லா வல்லமையும் மாட்சிமையும் பெற்று அமர்ந்து விட்டார். யாரெல்லாம் கடவுளின் விருப்பப்படி வாழ்வார்களோ, அவர்கள் அனைவருமே இயேசுவைப்போன்று உயிர்ப்பர். அதன்பின் தந்தையாம் இறைவனோடு வாழும் நிலைவாழ்வைப் பெறுவர் என்ற நம்பிக்கையூட்டும் விழாதான் இந்த விண்ணேற்றப் பெருவிழா. கடவுளின் விருப்பமான பசித்தோருக்கு உணவளிப்பதும், வலியோருக்கு இரக்கம் காட்டுவதும், உண்மைக்காக உயிர்போயினும்

போராடுவதும் நீதிக்காக நிமிர்ந்து நிற்பதும், எல்லாவற்றிற்கும் மேலாகப் பகைவரை நேசிப்பதுதான் இறை விருப்பத்திற்கேற்ப இயேசு வாழ்ந்துக் காட்டிய வாழ்வாகும். நாமும் இயேசு நமக்கு விட்டுச் சென்ற போதனைகளை அன்புக்கட்டளைகளை வாழ்ந்து காட்டுவோம். விண்ணேற்றம் அடைந்த ஆண்டவரிடம் அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. புத்துலகம் படைக்கும் புதுமை சிற்பியே எம் இறைவா, சிலுவையில் அறையப்பெற்று, உயிர்த்தெழும்பப் பெற்ற கிறிஸ்துமூலம் வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் இரக்கம், இப்பொழுது இருக்கின்ற உலகைவிடச் சிறந்த "அதிக மனிதத் தன்மை" கொண்ட ஓர் உலகை இன்றும் நாளையும் உருவாக்க முயற்சிக்கும் நம் திருத்தந்தை பிரான்சிஸ், அவரோடு இணைந்து செயலாற்றும் ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர் அனைவரையும் இறை இரக்கத்தின் மக்களாக வாழும் வரத்தைப் பொழிந்து காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் ஊற்றாகிய தந்தையே இறைவா, மிகச்சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்று கூறியதிலிருந்து, இரக்கமுடையோர் பேறுபெற்றோர் என்பதை உய்த்துணர்ந்து, அந்த இரக்கச் செயலை நாங்கள் செய்து வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று, ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. நானிலம் போற்றும் நல்லாயனே இறைவா, கிறிஸ்துவ மேய்ப்புப்பணி திட்டத்தில் மக்களுக்கு முதலிடம் கொடுத்து, கிறிஸ்துவ மயமாக்கி அதன் வழியாக, நோயுற்றோரைக் கண்டு செபித்தல், சிறையிலிருப்போரைச் சந்தித்து ஆறுதல் கூறி, அன்பு காட்டுதல், உணவற்றவருக்கு உணவளித்தல், ஒதுக்கப்பட்டோர், கைவிடப்பட்டோருக்கு வழிகாட்டுதல், ஏழைகளை நேசித்தல், தேவையில் உள்ளவருக்கு தேவையைப் பூர்த்தி செய்தல், இயற்கைப் பேரிடர் வரும்போது சுயநலம் பாராது உதவி செய்வது போன்ற நற்செயல்கள் மூலம் நாம் இரக்கத்தை இறைவனிடமிருந்து பெற்று கிறிஸ்துவ சாட்சிய வாழ்வுக்கு உருக்கொடுத்து வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று, ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

**13.05.2016 பாத்திமா அன்னை திருப்பலி**

திருமதி டிலைலா சேவியர்

முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்த இறைமக்களே, இன்றைய தினம் நாம் திருப்பலியில் புனித பாத்திமா அன்னையை நினைவு கூர்வோம். 80,00,000 மக்களை கொள்ளை கொண்ட முதல் உலகப்போரின்போது 13.5.1917ம் ஆண்டில் தேவதாய் போர்த்துக்கல் நாட்டில் பாத்திமா என்னும் ஊரில் மூன்று சிறுவர்களுக்கு தோன்றினாள். Lucia, Jecintha, Francia இவர்களுக்குப் பாத்திமா அன்னை 13.5.1917லிருந்து அக்டோபர் 13,1917 வரை தோன்றி, மக்கள் பலவித தொல்லைகளில் துன்பப்பட்டுக் கொண்டுள்ளனர். மேலும் மக்கள் எண்ணமுடியாத பாவங்களை செய்து இறைவனையும் மரியாளின் மாசற்ற இதயத்தையும் மனநோக செய்கின்றனர். முக்கியமாக மக்கள் பாவ வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, மனம் திரும்பவும் அதனால் உலகில் அமைதி, சமாதானம், நீதி போன்றவைகளை நிலைநிறுத்த ஒவ்வொரு நாளும் பக்தியோடு செபமாலை செபிக்கும்படி அன்னை மூன்று சிறுவர்கள் வழியாக நம்மிடம் கேட்டுக்கொண்டாள்.

குறிப்பாக ஒவ்வொரு செபமாலையின் பத்து மணிகளின் முடிவில் "ஓ என் இயேசுவே என் பாவங்களை மன்னியும், நரக நெருப்பிலிருந்து எங்களைக் காப்பாற்றும். விசேமாக உமது உதவியாருக்கு தேவையோ அவர்களை பரலோகத்தில் சேர்த்தருளும்" என்ற வல்லமை வாய்ந்த செபத்தை சொல்லும்படி கேட்டுக்கொண்டாள். எனவே இன்றைய தினம் அன்னையின் திருவிழாவை சிறப்பிப்பதோடு அன்னை நமக்கு விடுத்தச் செய்திகளை நினைவில் கொண்டு, இனி தினமும் செபமாலை செபிப்போம் என்ற உறுதியுடன் இத்திருப்பலியில் பங்கெடுப்போம். செபமாலை

செபிப்பதின் வழியாக அநேக நன்மைகளை பெறுவோம். பாவ வாழ்விலிருந்து மனந்திரும்பி, மரியாயின் மாசற்ற இதயத்தின்மீது பக்திக் கொள்வோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்களை பாவ வாழ்விலிருந்து நல்வழியில் நடத்தும் பணிகளிலும் திருச்சபை என்னும் சமூகத்தை சமாதான பாதையில் கொண்டுச் செல்ல இவர்களுக்கு இறைவனுடைய வல்லமையும், தூய ஆவியின் வரங்களையும் தந்து வழிநடத்துமாறு நல்ல ஆன்ம சரீர நலம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. சமாதானத்தின் இருப்பிடமே இறைவா, இன்று உலக நாடுகளிடையே அமைதியின்மை, போர், வன்முறை, இரக்கமற்ற செயல்கள், மனிதனை மனிதன் எதிர்த்து, அன்பு தனிந்து போய் விரோத உணர்வே நிரம்பியுள்ள இந்நாட்களில் இறைவன் நமக்கு தந்த சமாதானத்தின் மேன்மையை உணர்ந்து, மன்னிக்கும் மனப்பான்மையை உருவாக்கி அதனால் சகோதர உணர்வை ஒவ்வொருவர் மனதிலும் உருவாகிட வேண்டுமென்றும் பகைமை அழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய்மையே இருப்பிடமான இறைவா, இன்றைய நாட்களில் பல்வேறு சூழ்நிலைகளினால் உலகில் பாவங்கள் அதிகரித்து இயல்பு நிலை, அமைதி நிலை, தூய்மையற்ற வாழ்வு போன்றவைகளை சந்தித்தும் நாம் இறைவனின் துணையோடும், புனித பாத்திமா அன்னையின் பாதுகாவலிலும் நம்மை ஒப்புக்கொடுத்து நம்மையும் நமது பாவ வாழ்க்கையையும் சோதித்தறிந்து, புனித வாழ்க்கையை வாழ கிருபை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கத்தின் ஊற்றே இறைவா, உலகிலுள்ள எல்லா சிறுவர்கள், சிறுமியர் வாலிபர், வாலிப பெண்கள் அனைவரையும் விஷேசவிதமாக ஆசிர்வதியும். இவர்களின் எண்ணங்கள், ஏக்கங்கள், நல்ல எதிர்காலம் அனைத்தையும் உமது கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். இவர்களுக்கு தேவ அழைத்தல் என்னும் வரத்தை தருவதற்கான நல்ல குடும்ப சூழ்நிலையும், பங்கு பாதுகாவலும், வழிநடத்துதலும் பெற்றோரின் செபமும், உற்சாகமும் பெற்று இறைவனுக்கு தங்களை கையளித்து இறைபணி செய்திட வேண்டிய வரம் தருமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**15.05.2016 தூய ஆவியின் கொடைகளுக்காக நவநாள்**

அருட்பணி. அந்தோணி கிறிஸ்டி சச.,

**நவநாள் வழிமுறை**

1. குறிப்பிட்ட நாளுக்கான செபம்
2. பரலோகத்தில் இருக்கிற...
3. அருள் நிறைந்த...
4. தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக... (மூன்று முறை)
5. அர்ப்பண செபம்
6. ஆவியின் கொடைகளுக்காக செபம்

**06.05.2016**

**முதல் நாளுக்கான செபம்**

எல்லாம் வல்ல இறைவா, நீரினாலும் ஆவியினாலும் புதுப்பிறப்படைய செய்பவரே, எங்கள் பாவங்களையெல்லாம் இரக்கத்தோடு மன்னிப்பவரே, இறைஇயேசுவைப்போல நாங்களும் ஆவியின் வரங்களாம் ஞானம், புத்தி, விமரிசை, அறிவு, திடம், பக்தி, தெய்வ பயம் ஆகியவற்றை பெற்று முழுமையாய் வாழும் வரம் தாரும். ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...

தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும...(3 முறை)

**அர்ப்பண செபம்**

தூய ஆவியே உம்மை ஆராதித்து வணங்குகின்றேன். உம் தூய்மை, நீதி, அன்பு என்னும் சுடர்விடும் நலன்களுக்காக உம்மை போற்றுகின்றேன். என் ஆன்மாவின் ஆற்றலும் ஒளியும் நீரே, உம்மிலே நான் இயங்குகிறேன் உம்மிலே நான் உயிர் வாழ்கிறேன். உம்மை மனம் நோகச் செய்யும் எந்தவொரு செயலையும் செய்வதில்லை என உறுதிக்கொள்கிறேன். என் ஆன்மா என் இதயம் முழுதும் உமக்காகவே வாழ முடிவெடுக்கிறேன், உமக்கெதிராக எவ்வித சிறு பாவமும் என்னை நெருங்காமல் காத்துக்கொள்ளும். என் சிந்தனை ஒவ்வொன்றையும் காத்தருளும். உமக்காகவும் உம் ஒளிக்காகவும் என்றும் காத்திருக்க எனக்கு உதவியருளும். உமது தூண்டுதலோடு எதையும் எதிர்க்கொள்ளும் வரத்தையும் என் பலவீனங்களில் உம்மைப் பற்றிக்கொள்ளும் மனதையும் எனக்கு தந்தருளும். தந்தையோடும் மகனோடும் ஒன்றித்து வாழும் உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**தூய ஆவியின் கொடைக்காக செபம்**

உயிர்த்து விண்ணேற்றம் அடைவதற்கு முன் உமதாவியை அனுப்புவதாய் வாக்களித்த கிறிஸ்துவே எம் இறைவா, உம் மீட்பின் முழுமையான பலன்களை நான் உணரும் படியாய் உமது ஆவியால் என்னை நிரப்பியருளும்.

ஞானத்தின் ஆவியைத் தாரும், நிலையற்றவைகளிலிருந்து நிலையானவற்றை ஆய்ந்தறிய செய்தருளும்.
நல்லறிவின் ஆவியை எனக்குத் தந்தருளும். உம் உண்மையின் ஒளியை நான் பெறச் செய்யும்.
வழிகாட்டுதலின் ஆவியை எனக்குத் தந்தருளும். என்றும் இறை உமக்கு ஏற்ற வழியை தேர்ந்திடச் செய்யும்.
திடமளிக்கும் ஆவியை எனக்குத் தந்தருளும். உம்மோடு இணைந்து என் அன்றாடச் சிலுவைகளை உவப்புடன் சுமக்கச் செய்யும்.
நுன்னறிவின் ஆவியை எனக்குத் தந்தருளும். இறைத்தந்தையையும் உம்மையும் அறியவும் என்னை நானே அறிந்து வாழவும் செய்தருளும்.
இறைப்பற்றின் ஆவியை எனக்குத் தந்தருளும். இறையன்பிலே மகிழ்ந்திடச் செய்தருளும்.
இறையச்சத்தின் ஆவியை எனக்குத் தந்தருளும். இறை சித்தத்திற்கு எதிராய் செல்லும் எதையும் எதிர்த்துப் போராடச் செய்யும்.

உம் ஆவியினால் முத்திரையிடப்பட்டு என்றும் இறைத்தந்தையின் ஏற்புடையப் பிள்ளையாய் வாழும் வரம் தாரும். ஆமென்.

07.05.2016

**இரண்டாம் நாளுக்கான செபம்**

வாரும் தூய ஆவியே, என் உள்ளத்தை தூய்மை தரும் இறையச்சத்தால் நிரப்பியருளும். இதனால் தந்தையையும், மகனையும் உம்மையும் என் கண்முன் கொண்டு வாழவும் உம் தூய்மைக்கு ஏற்றதொரு வாழ்வு வாழவும் துணைச் செய்யும். ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...
தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும...(3 முறை)

**அர்ப்பண செபம்**
**தூய ஆவியின் கொடைக்காக செபம்**

08.05.2016

**மூன்றாம் நாளுக்கான செபம்**

வாரும் தூய ஆவியே, பக்தியால் என் மனதை நிரப்பியருளும். கடவுள்மீது ஆழ்ந்த அன்பை ஊற்றெடுக்கச் செய்து இறையன்பில் முழுமைக்காணவும், இறைச்சித்தத்தை வாழ்வதில் மகிழ்ச்சிக் காணவும், அதே அன்போடு சகோதர சகோதரிகளை நேசிக்கவும் செய்தருளும். ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...
தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும...(3 முறை)

**அர்ப்பண செபம்**
**தூய ஆவியின் கொடைக்காக செபம்**

09.05.2016
**நான்காம் நாளுக்கான செபம்**
வாரும் தூய ஆவியே, உம் பிரசன்னம் தரும் திடத்தால் எனனை நிரப்பியருளும். துன்பச்சூழல்கள் எதிர்த்து நிற்கும் போது தொடர்ந்து போராடும் வலிமைப் பெறவும் பலவீனமான நேரங்களில் துணிந்து நிற்கவும், சாத்தானின் சூழ்ச்சிகளை உம் வல்லமையால் எதிர்க்கொள்ளவும் வரம் தாரும். ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...
தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும...(3 முறை)

**அர்ப்பண செபம்**
**தூய ஆவியின் கொடைக்காக செபம்**

10.05.2016
**ஐந்தாம் நாளுக்கான செபம்**
வாரும் தூய ஆவியே, என் அறிவை கூர்மைப்படுத்தும். இறைத்தந்தையின் சித்தத்தை ஆய்ந்து அறியவும், உலகத்தின் போக்கின்படி வாழ்வதிலுள்ள வெறுமையை புரிந்துக்கொள்ளவும், என் திறமைகள் என் வளங்கள் அனைத்தும் உம் கொடைகள் என்பதை உணர்ந்து உம்மை என்றும் புகழ்ந்தேத்தும் வரமருளும். ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...
தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும...(3 முறை)

**அர்ப்பண செபம்**
**தூய ஆவியின் கொடைக்காக செபம்**

11.05.2016
**ஆறாம் நாளுக்கான செபம்**
வாரும் தூய ஆவியே, புரிதலின் வரத்தால் என்னை நிரப்பியருளும். மேன்மைமிகு மறையுண்மைகளை புரிந்துக்கொள்ளவும், மீட்புக்கு தேவையான உண்மைகளை மனதார ஏற்றுக்கொள்ளவும், இதன்வழியாய் உம் பேரொளியைக் கண்டு மகிழும் முடிவில்லா வாழ்விற்கு தகுதி பெறவும் வரம்தாரும். ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...
தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும...(3 முறை)

**அர்ப்பண செபம்**
**தூய ஆவியின் கொடைக்காக செபம்**

**12.05.2016 ஏழாம் நாளுக்கான செபம்**
வாரும் தூய ஆவியே, நல்வழி அறியும் உமது வரத்தால் என்னை நிரப்பியருளும். உம் வழிநடத்துதலுக்கு பணிந்து நடக்கவும், என் கடமையுணர்ந்து செயல்படவும், என்னை இடறச்செய்யும் வழிகளை தவிர்த்து வாழவும் நான் உமது கட்டளைகளுக்கு என்றும் கட்டுப்பட்டு நடக்கவும் வரம் தாரும். ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...
தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும...(3 முறை)

**அர்ப்பண செபம்**
**தூய ஆவியின் கொடைக்காக செபம்**

13.05.2016
**எட்டாம் நாளுக்கான செபம்**
வாரும் தூய ஆவியே, உம் ஞானத்தால் என்னை நிரப்பியருளும். இறையுண்மைகளை உணரவும் மறையுண்மைகளை புரிந்துக்கொள்ளவும் இறையுணர்வால் அன்றாடம் வாழவும், இவற்றை நிலையில்லா பலவற்றை காட்டிலும் மேலாக மதித்து வாழவும் வரம் தாரும். ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...
தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும...(3 முறை)

**அர்ப்பண செபம்**
**தூய ஆவியின் கொடைக்காக செபம்**

14.05.2016
**ஒன்பதாம் நாளுக்கான செபம்**
வாரும் தூய ஆவியே, உம் திரு கொடைகளால் என்னை நிரப்பியருளும். இந்த நவநாள் முழுவதும் நான் உம்மிடம் கேட்ட கொடைகளாலும் உமது கனிகளாலும், உமது தனிவரங்களாலும் என்னை நிரப்பி தந்தைக்கும் கிறிஸ்துவுக்கும் உமக்கும் புகழ் சேர்க்கும் வகையில் நம்பிக்கையின் வல்லமையோடு வாழ துணைப்புரியும். ஆமென்.

பரலோகத்தில் இருக்கிற... அருள் நிறைந்த...
தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும...(3 முறை)

**அர்ப்பண செபம்**
**தூய ஆவியின் கொடைக்காக செபம்**

15.5.2016 **தூய ஆவி பெருவிழா** **திருப்பலி**
திருமதி ராணி சம்பந்தன்

முன்னுரை
இறை இயேசுவில் பிரியமான இறைமக்களே, இன்றைய நாளில் நாம் தூய ஆவியாரை கொண்டாடி மகிழ்வோம். தூய ஆவியார், இயேசுவால் வாக்களிக்கப்பட்டவர், இணையற்ற நண்பர், நம் துணையாளர். தூய ஆவியானவர் தன்னுடைய தெய்வீக பிரசன்னத்தால் தம் இணையில்லா அன்பால், அமைதியால், மகிழ்ச்சியால், தூய்மையால், வல்லமையால், அருளால் கொடைகளால், கனிகளால் நம்மை நிரப்பிக் கொண்டிருக்கிறார். நம் உடல் அவர் வாழும் தேவாலயம். திருமுழுக்கின் வாயிலாக நம் ஒவ்வொருவரையும் பாவத்திலிருந்து விடுதலையாக்கி கொண்டிருக்கிறார்.

அன்று அன்னை மரியாளின் உதிரத்தில் பிரசன்னமான அதே தூய ஆவியார் இன்றும் திருப்பலியில் அப்பரசத்தில் இயேசுவின் பிரசன்னத்தை கொண்டு வருகிறார். உரோமையருக்கு எழுதிய மடலில் தூய பவுலடியார், "நீங்கள் ஊனியல்புக்கு ஏற்ப வாழாமல், தூய ஆவியின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழுங்கள் என்று கூறுகிறார். தொடக்கத்தில் உலகம் வெறுமையாய் இருள் பரவியிருந்த காலத்தில் தண்ணீரின்மீது அசைவாடி கொண்டிருந்த நம் தூய ஆவியாரை, அருட்சாதனங்கள்மூலம் நம்முள் உலாவரும் தூய ஆவியாரை இந்த பெந்தகோஸ்தே பெருநாளில் வணங்கி போற்றி மகிழ்வோம். திருப்பலியில் அவருடன் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இரக்கமே உருவான இறைவா, தூய ஆவியாரின் முதல் சீடராகிய புனித இராயப்பர் வழிவந்த நம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறை இரக்கத்தின் ஆண்டாகிய இவ்வாண்டில் இரக்கம் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு, அதன் மூலமாக நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் செவ்வனே செய்திட வேண்டிய ஆற்றலை தூய ஆவியார் தம் கொடைமூலம் வழங்க வேண்டும் என்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஞானமே உருவான இறைவா, ஊனியல்பு கொண்டவர்களாக நாங்கள் வாழும் இந்த சூழலை மாற்றி, கடவுளுக்கு ஏற்புடையவர்களாக வாழும் நல் உள்ளத்தை எமக்களிக்க உம் அருட்கொடையான ஞானத்தை எங்களுக்கு வழங்குமாறு தூய ஆவியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பிக்கையின் ஆணிவேரே இறைவா, வேதனைகளாலும், சோதனைகளாலும், தீராத நோய்களாலும் தாக்கப்பட்டும், வேலையின்றியும், வருமானமின்றியும், நம்பிக்கையை மட்டும் உம்மீது வைத்துக்கொண்டு அல்லலுறும் மக்களை நீர் அரவணைக்கவும், ஆசிரளிக்கவும் தூய ஆவியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. பாதுகாப்பின் இறைவா, நடைப்பெற போகும் நமது மாநிலத்தின் தேர்தல் வன்முறைகளால் பாதிக்கப்படாமல் நேர்மையுடன் நடந்து, மக்களுக்கு ஆதரவாக பல செயல்திட்டங்கள் கொண்டுவரும் நல்ல தலைவர்களைக் கொண்ட அமைப்பாக அமையவேண்டுமென்று தூய ஆவியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**22.5.2016 மூவொரு கடவுள் பெருவிழா திருப்பலி**

திரு. D.V.R. ராஜா

முன்னுரை

அன்பு நிறை இறைக்குலமே, நம் திருஅவை மூவொரு கடவுளின் விழாவை இன்று கொண்டாடுகின்றது. இன்றைய முதல் வாசகத்தில் இறைவன் ஞானமாக இருக்கின்றார். அந்த ஞானம் உலகம் தோன்றும் முன்பே இருந்தது என்றும், இரண்டாம் வாசகம் நாம் கிறிஸ்துவுக்குள் ஒன்றித்து வாழ வேண்டும் நமது நல்லுறவு ஆண்டவராகிய கிறிஸ்துவில் மையப்பட வேண்டும் என்றும், நற்செய்தியில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தந்தையிடம் பெற்றதை தூய ஆவியார் வழியாக நமக்கு அருள்கின்றார் என்றும் கூறி நம்மை மூவொரு இறைவனின் ஒற்றுமையையும் ஒன்றிப்பையும் குறித்து சிந்திக்க அழைக்கிறது. தந்தையே நாம் ஒன்றாய் இருப்பதுபோல இவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக என்று ஆண்டவர் நமக்கு விடுக்கும் அழைப்பு நம்மை ஒருவர் மற்றவரை புரிந்துக்கொண்டு வாழ தூண்டுகிறது. நம் விசுவாசம் மற்றவர்களோடு பழகும்போது அவர்களும் அதைப் பெற்றுக்கொள்ள வழி செய்ய வேண்டும். மூவொரு இறைவனின் பிரசன்னத்திலே இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை ஏனைய துறவறத்தார் தங்களின் ஆன்மீக வாழ்விலும், அனுபவத்திலும், உணர்த்துதலிலும் மக்களை மேன்மையான வகையில் வழிநடத்திட மூவொரு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. புதிய ஆட்சியை ஏற்றிருக்கும் தலைவர்கள் கடந்த காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட உபத்திரவங்கள் இடறல்கள் அனைத்தையும் களைந்து மக்களின் எதிர்காலம் முன்னேற்றமடைய சிறந்த திட்டங்கள் மூலம் மறுமலர்ச்சி தர மூவொரு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இன்றைய இளைய சமுதாயத்தினர் உயிர்த்த இயேசுவை உள்ளத்தில் ஏற்று நற்பண்புகளையும் போதனைகளையும் பின்பற்றி வாழ்வில் முன்னேற்றம் காண மூவொரு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. நமது பங்கு மக்கள் விசுவாசத்தில் நிலைத்து இறையரசை அறிவிக்கவும் சாட்சிகளாய் விளங்கவும் தங்களின் பிள்ளைகள் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று உயரவும் பிள்ளைகளின் கல்வி கட்டணத்திற்கு கலங்கி நிற்கும் பெற்றோர்களுக்கு இறைவன் தாமே தேவையான உதவிகளை செய்திட மூவொரு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 24.05.2016 கிறிஸ்தவர்களின் சகாய அன்னை திருவிழா திருப்பலி

திருமதி ராணி வில்சன்

முன்னுரை

புனித தொன் போஸ்கோ உருவாக்கிய சலேசிய சபையின் தலைவியும், பாதுகாவலியுமான கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் பக்தி முயற்சிகளும் மரியாளின் மீது விசுவாசமும் 345ம் ஆண்டிலிருந்தே பின்பற்றி வருகிறது. (Saint John Chrysostom) என்பவர் முதன் முதலில் மரியாளின் பக்தியை கிறிஸ்தவர்களின் சகாயியான மரியாள் என்ற பெயரில் ஆரம்பித்தார். இதனையே புனித தொன் போஸ்கோ அவர்களும் கிறிஸ்தவர்களின் சகாய அன்னை என உலகிற்கு பறைசாற்றினார். அதுமட்டுமல்லாமல் இத்தாலியின் தூரின் நகரத்திலே கிறிஸ்தவர்களின் சகாய அன்னைக்கு பேராலயம் ஒன்றை கட்டினார்.

1572ம் ஆண்டில் ஐரோப்பிய நாடுகளிலுள்ள கிறிஸ்தவர்களையும் சகாய அன்னையின் பக்தியை அனுசரிக்கும் நாடுகளையும் கைப்பற்ற இஸ்லாமிய ஆதிக்கம் முயற்சி செய்து கொண்டிருந்தது. எனவே 5ம் பத்திநாதர் ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்தவ போர்ப்படையிலுள்ள வீரர்களை சகாய அன்னையிடம் விசுவாசத்தோடு செபிக்குமாறு கேட்டுக்கொண்டார். 1808ம் ஆண்டில் நெப்போலியன், ஏழாம் பத்திநாதர் திருத்தந்தையை சிறைப்படுத்தினான். எனினும் லெய்ப்ஸிங் (டுநணிணைபெ) என்னுமிடத்தில் நடந்த போருக்குப் பின்னர் திருத்தந்தை விடுதலை அடைந்தார். கடவுளுக்கும் இறை அன்னைக்கும் நன்றியாகவும், நெப்போலியன் கையிலிருந்து விடுதலைப்பெற்ற வருடாந்திர நாளை நினைவூட்டவும் திருத்தந்தை இவ்விழாவை ஏற்படுத்தினார். இத்திருப்பலியில் நம் அன்னையிடம் நமக்காக பரிந்துபேசி செபிக்குமாறு ஒப்புக்கொடுத்து மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் திரு அவையின் தலைவரான திருத்தந்தையையும், கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்கள் பணிகளில் ஈடுபடும்போது ஏற்படும் இன்னல்கள், இடையூறுகளை களைந்து அவர்களைப் பாதுகாத்து வழிநடத்திட வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் ஊற்றே இறைவா, இந்த இறை இரக்கத்தின் ஆண்டில் யார் யாரெல்லாம் இரக்கச் செயல்களில் ஈடுபடுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் துணை நின்றருளும். பொருளுதவியும் உடல் நலனும் அளித்தருளும். அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதியும். எல்லா பலனும் பெற்று வாழ உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்களின் தேவைகளுக்காக சகாயத்தாயை அளித்த இறைவா, அந்த அன்னையைப் போல எளிமையை ஏற்று வாழவும், இறைவனுக்கும் மனிதனுக்கும் உகந்தவர்களாய் பணி ஏற்கவும், கீழ்ப்படிதலோடு அநீதி நடக்கும்போது துணிச்சலோடு, வீரத்தோடு ஒரே சேனையாய் நின்று

போராடி வெற்றி பெறவும், அந்த அன்னையின் பரிந்துரை செபத்தை பெற்றிடவும் அனைவரும் அன்னையை போற்றி வாழவும் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**29.05.2016 கிறிஸ்துவின் திருவுடல் திருரத்தம் பெருவிழா திருப்பலி**

திருமதி பத்மாவதி

முன்னுரை

கிறிஸ்து நமக்காக தம் உடலை சிதைத்து அப்பமாகவும் இரத்தத்தை இரசமாக கொடுத்து நம்மை மீட்படையச் செய்தார். இயேசுவின் பாடுகள் இல்லையெனில் நமக்கு மீட்புமில்லை. முடிவில்லா பேரின்ப வாழ்வுமில்லை. எனவேதான் நாம் இன்று திருவுடல் திருரத்தம் திருவிழாவை கொண்டாகிறோம்.

இன்றைய மூன்று வாசகங்களும் நமக்கு இதனையே எடுத்து கூறுகின்றன. பாஸ்கா இரவு அன்று சீடர்களை பந்தியமர்த்தி, அப்பத்தை பிட்டு அவர்களுக்கு கொடுத்து "இது என் உடல், இதை உண்ணுங்கள்" இக்கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று நம் ஆண்டவர் தம்மையே நமக்கு தருகிறார் என்பதினை விசுவாசத்துடன் ஏற்று நம்மை தூய்மைப்படுத்தி என்றும் அவரது சீடர்களாக வாழ உறுதி கொள்வோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அளவிட முடியாத அன்பினால் எம்மை மீட்ட தந்தையே, எங்கள் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், மற்றும் துறவறத்தார் அனைவரையும் நீர்தாமே காத்துக்கொள்ளும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எங்களுக்காக உம்மையே பலியாக தந்த கிறிஸ்துவே, ஒவ்வொரு திருப்பலியிலும் உம்மையே உணவாக பெற்றுக்கொள்ளும் நாங்கள் உண்மையான தியாக உள்ளத்துடன் உமக்கு ஊழியம் புரிந்திட எம்மை வழிநடத்தும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்கள் ஆண்டவராகிய இயேசுவே, எம் பங்கு மக்களை உமது விலையேறப்பட்ட இரத்தத்தால் கழுவியருளும். தூய ஆவியின் அக்கினி கோட்டைக்குள்ளாக தீமை அணுகாமல் எம்மை மறைத்துவைத்தும், நீர் உலகிற்குக் கொண்டுவந்த சமாதானமும் தெய்வீக நிம்மதியும் எங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் பொங்கிவழிய அருள்புரியும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**31-05-2016 அன்னை மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தல் - திருவிழா திருப்பலி**

திரு.ஜான் அலெக்ஸ்

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்று நாம் திருச்செபமாலையின் 2ம் மகிழ்ச்சி நிறை மறையுண்மையை கொண்டாடுகின்றோம். அதாவது எலிசபெத்தை அன்னை மரியாள் சந்தித்த விழாவை கொண்டாடுகின்றோம். அன்னை மரியாளை பற்றி விவிலியம் கூறுகின்றவற்றையும் வரலாற்றில் திருச்சபை மரியாவைப் புரிந்துகொண்ட முறையையும் கருதும்போது நம் மரியாவுக்கு கடவுள் அளித்த தனிச்சிறப்பை அறிந்துகொள்ள முடிகிறது. மரியாவுக்கு கடவுள் இப்பெரும் சிறப்பை அளித்தது கடவுளின் அருட்பெருக்கின் விளைவே. கடவுளின் திருவுளத்தை முழுமையாக ஏற்று செயல்பட்ட மரியாவைக் கடவுள் உயர்த்தினார். மேலும் மரியா எலிசபெத்தைச் சந்தித்தபோது அவரை அன்போடு வரவேற்று எலிசபெத்து கூறியது "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்" என்பது. கடவுளின் முன்னிலையில் தாழ்ந்து, "நான் ஆண்டவரின் அடிமை" (லூ 1:38) என்று மரியா கூறியதோடு கடவுளின் திருவுளத்தை எப்போதும் நிறைவேற்ற முன்வந்ததால் கடவுளின் ஆசி அவருக்கு நிறைவாக வழங்கப்பட்டதை நாம் பார்க்கின்றோம். எனவே இன்றைய நாளிலே கடவுளின் ஆசி நம்மீதும் பொழியப்பட வேண்டும் என நாம் மன்றாடுகின்ற சிறப்புநாளாகவும் இருக்கின்றது. கடவுளை நம்பி அவர் வழியில் நடப்போருக்கு எத்தகு உயர்நிலை காத்திருக்கிறது என மரியா நமக்குத் தொடர்ந்து

அறிவித்துக்கொண்டே இருக்கிறார். கடவுளின் முன்னிலையில் நாம் தாழ்ச்சியோடு வாழ்ந்து அன்னை மரியாளின் அன்புக்கரங்களில் நம்மை ஒப்படைத்து இயேசுவோடு இணைந்து வாழவும் அவரது மாட்சியை பெறவும் தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழவும் உம்மை தாழ்ச்சியோடு அணுகி வர வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

2. அன்னை மரியா மனிதகுலம் மீட்பு அடையும்போது எந்நிலையை அடையும் என காட்டும் விதத்தில் கடவுளின் அரசில் ஏற்றுக்கொள்ளப்பட்டு மாட்சிமை அடைந்ததுபோல நாங்களும் கடவுளின் திருவுளத்தை எப்போதும் நிறைவேற்றிட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

3. இறைவா அமைதி தேடி ஏங்குகின்ற மக்களின் வாழ்வில் இன்னும் கோலோச்சுகின்ற அடிமைத்தனங்கள் மறைந்து சமத்துவமும், அன்பும், சுதந்திர அனுபவமும் விடிந்திட அதற்காக நாங்கள் உழைத்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. துன்பமும் இன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை என்ற வாழ்வியல் கலையை அன்னை மரியாள் நமக்கு கற்றுத்தந்துள்ளார் அதை வாழ்வாக்கியும் காட்டியுள்ளார். அவரைப் போல் நாங்களும் துன்பத்தைத் தாங்குவதன் மூலமாக அதையும் இன்பமாக மாற்றும் அருள்பெற்று வாழ வருமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

### தூய ஆவியின் கொடைகள்

திரு லூயிஸ் சகாயராஜ்

உலகைப் படைத்தவர் உன்னதத் தந்தை, உலகோரை மீட்டவர் உயிர்கொடுத்த மகன், உயிரளித்துக் காப்பவர் ஊற்றுத் தண்ணீராம் தூய ஆவியார் மூவொரு இறைவனின் திருப்பெயர் போற்றப்படுவதாக.

**தூய ஆவி யார்?**

தந்தை கடவுளையும் இயேசு ஆண்டவரையும் பற்றி அறிந்து-தெரிந்து-புரிந்து வைத்திருக்கும் நம் பலருக்கும் தூய ஆவியார் குறித்து தெளிவுகள் தெரிவதில்லை. நம்மில் ஒன்றாகக் கலந்து-நம்மில் ஒருவராகத் தங்கி-நமக்குள் நம்மை இறைத் தன்மையில் இணைக்கும்-பிணைக்கும் உயிராக விளங்குபவரே தூய ஆவியார். விசுவாசப் பிரமாணத்தில் தெளிவாக சொல்லப்படுவது பிதாவினின்றும் சுதனின்றும் புறப்படும் ஆண்டவர் உயிர் அளிப்பவர்-பிதாவோடும் சுதனோடும் ஒன்றாக ஆராதனையும் மகிமையும் பெறுபவர் இறைவாக்கினர்கள் வாயிலாகப் பேசியவர் இந்த தூய ஆவியார்தாம். எனவே, தூய ஆவியார் பழைய ஏற்பாட்டில் செயல்பட்டு, படைப்பின் தொடக்கம் முதல் நம்மோடு இருந்தவர், புதிய ஏற்பாட்டின் புதிய பாஸ்காவாகிய இயேசுவின் மீட்புப் பணியில் திருத்தூதர்கள் தொடங்கி இன்றைய திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் என எல்லோரையும் அரவணைத்து, ஒன்றிணைத்து, இறையாட்சியை நோக்கி நடத்திச் செல்பவர். பழைய ஏற்பாட்டில் 378 முறையும், புதிய ஏற்பாட்டில் 335 முறையும் ஆவி என்னும் கூற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. படைப்பின் தொடக்கம் முதல் இன்று வரை செயல்பட்டுக் கொண்டிருக்கும் தூய ஆவியார் மிகவும் அர்த்தமுள்ள வகையில் தியானிக்கப்பட வேண்டியவர் ஆராதிக்கப்பட வேண்டியவர்.

**தூய ஆவியாரின் வெளிப்பாடுகள்**

தொடக்க நூல் 2:7ல் மண்ணான மனிதனுக்குள் புகுந்து உயிர் தந்தது தூய ஆவியார்.

திருப்பாடல் 51:11, எசாயா 63:10-11ல் இறைவனின் உடனிருப்பு எனும் பொருளில் தூய ஆவியார் வெளிப்படுகின்றார்.

எசேக்கியேல் 37:1, 17:1, 18:1, 23:36ல் இறைவனின் மூச்சாக, குரலாக, நீதியாக வெளிப்படுத்தப்படுகிறார்.

தொடக்க நூல் 1:2, 1:7, திருப்பாடல் 104:30, எசேக்கியேல் 37:14, 39:29ல் புத்துயிர் அளிக்கும் படைக்கும் பணி செய்பவராக வெளிப்பத்தப்படுகின்றார்.

எசேக்கியேல் 36:26-27, எசாயா 34:16, எசாயா 11:2, விடுதலைப்பயணம் 3:5, 25:8, 2சாமுவேல் 7: 5-7ல் ஆட்கொண்டு நடத்தும் ஆவியானவராக வெளிப்படுகின்றார்.

எசேக்கியேல் 37:17-10, நீதித்தலைவர்கள் 14:6,14:19ல் ஆற்றலும், உயிரும், உணவும் தரும் ஆவியார் வெளிப்படுத்தப்படுகின்றார்.

இயேசுவின், மெசியாவின் வருகைக்கு பல்வேறு நிலைகளில் முன்னறிவித்து, அவரது வருகைக்கு தயாரிக்கும் பணியில் இறைவாக்கினர்களை எசாயா தொடங்கி, திருமுழுக்கு யோவான் வரை அனைவரையும் எழுப்பி பிரகாசிக்கச் செய்தவர் இந்த தூய ஆவியார்தாம். மெல்லிய தென்றலில் எலியாவுடன் உரையாடி, மென்மையான மரியாவை, மேன்மையான தாயாக மாற்றி, செங்கடலைப் பிளந்து, மன்னாவைப் பொழிந்து பாறையைப் பிளந்து ஊற்றாகி, உயிரளித்ததும் தூய ஆவியார்தாம். அந்தத் தூய ஆவியால் தான் நாமும் ஒவ்வொரு நாளும் வழிநடத்தப்படுகின்றோம்.

இயேசுவை மரியாவுக்குள் கருவாக்கி, உருவாக்கி, மனுவாக்கியதும் தூய ஆவியே. அவரே, யோர்தானில் திருமுழுக்கு பெற்ற இயேசுவின் மீது இறங்கி தம்மை வெளிப்படுத்துகின்றார். மீட்பராம் இயேசுவின் மீட்புப்பணிக்கு அவரைத் தயாரித்து திடப்படுத்துகின்றார். இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு தன்னை முழுவதுமாக வெளிப்படுத்துகின்றார்.

**தூய ஆவியாரின் செயல்பாடுகள்**

தூய ஆவியார் குறித்த கத்தோலிக்க மறைக்கல்வி நமக்கு பல நிறைவுகளைக் கற்பிக்கின்றது. Catechism of the Catholic Church என்ற நூலில் மூன்றாம் அத்தியாயம் முழுவதும் தூய ஆவியார் பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எவ்வளவோ பணம் செலவழித்து பல்வேறு அறிவுசார்ந்த நூல்களைத் தேடித்தேடி வாங்கிக் குவித்து நம் அறிவைப் பெருக்குகின்றோம். நமது மறைக்கல்விக்காக நமது திருச்சபையின் கோட்பாடுகளைத் தெரிந்து கொள்ள எத்தனை புத்தகங்களை வாங்க முயற்சி செய்கிறோம்.

திருச்சபை முழுவதிலும் தங்கி, எங்கும் நிறைந்திருக்கும் தூய ஆவியாரின் செயல்பாடுகள் எண்ணிடலங்காதவை. அவரது கொடைகள், கனிகள், வரங்கள் மூலமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரிலும், ஒவ்வொரு நற்செயல்களிலும் தூய ஆவியார் செயல்பட்டுக் கொண்டேயிருக்கின்றார்.

**கொடைகள் (எசாயா 11: 2-3)**

7 கொடைகளை இறைவன் மெசியாவின் முன்னறிவிப்பில் வெளிப்படுத்துகின்றார். இக்கொடைகளை முழுமையாகப் பெற்றிட நமக்கு உறுதுணையாயிருப்பவர் தூய ஆவியார். நீதியுள்ள அரசராகிய மெசியாவின்மீது தங்கிய அதே தூய ஆவியார் இன்றும், நம்மீது தங்கி குடிகொள்கின்றார். திருமுழுக்கின் மூலம் நம்மை இறைமக்களாக்கிய தூய ஆவியார் அந்த உன்னத நிலையில் தொடர்ந்து நிலைத்திடவே, அருட்சாதனங்களை அள்ளிக் கொடுத்து வழிநடத்துகின்றார்.

**கனிகள் (கலாத்தியர் 5: 22)**

9 கனிகளை தூய ஆவியார் அருள்பவையாக பவுலடியார் நமக்குப் படிப்பிக்கின்றார். நமது ஊனியல்பின் இச்சைகளை நாட்டங்களை வென்றிட இந்த கனிகள் நமக்கு தூய ஆவியாரால் அருளப்பட்டுள்ளன. தன்னோடும், பிறரோடும், கடவுளோடும் நல்லுறவு பேண விரும்பும் எவரும் இக்கனிகளைக் கடைப்பிடித்தால் கண்டிப்பாக நல்வாழ்வைக் கண்டடையலாம். அன்பில் அனைத்தையும் அடக்கி

வைக்கும் இறைவன், தன்னில் நம்மையும் இணைத்துக் கொள்கின்றார். இதுவே கனிகளால் தூய ஆவியார் நமக்கருளும் பெரும்பேறு. அப்பேற்றினைப் பெற்றிட கனிகளை சுவைக்க முன்வருவோம்.

**வரங்கள் (1கொரி 12: 8-10)**

பொது நன்மைக்காகவே தூய ஆவியார் 9 வரங்களைக் கொடையாக அருள்கின்றார். இயேசு விண்ணிற்கு எழுந்தருளிச் சென்றபோது (மாற்கு 16:15-18) தம் திருத்தூதரிடம் கூறிய வாக்குறுதிகளையே வரங்களாக தூய பவுல் இங்கு வடிவமைத்துப் பட்டியலிடுகின்றார். இந்த வரங்களைப் பெற நமக்குத் தகுதி தூய ஆவியாரின் அருட்பொழிவு மட்டுமே. திருமுழுக்கில் பெற்ற அருட்பொழிவை, அழியாமல் காத்து வருவதால் மட்டுமே இந்த வரங்களைப் பெற்றிட நம்மால் இயலும். அவ்வாறு பெறும் வரங்களை நம்முடைய சுயநலுக்காக, சுயவளர்ச்சிக்காக அல்லாமல், எல்லோரும் பயன்பெறும் வகையில் பொதுநலனுக்காகப் பயன்படுத்தவே தூய ஆவியார் அவற்றை நமக்கு அருள்கின்றார்.

**அருட்சாதனங்களில் தூய ஆவியார்**

திருமுழுக்கில் நம்மைக் கடவுளின் பிள்ளைகளாக்கும் தூய ஆவியார் உறுதிப்பூசுதலில் அதன் உறுதிப்பாட்டை நிலைப்படுத்துகின்றார். நற்கருணையில் இயேசுவின் திருவுடல்-திருரத்தமாக அப்பத்தையும் இரசத்தையும் மாற்றி நமக்கு ஆன்ம உணவாக தருகின்றவர் தூய ஆவியார் தாம். ஒப்புரவில் நமது பாவங்களை நாம் ஏற்றுக்கொள்ளத் தூண்டுவதும் மன்னிப்பில் மனம் மகிழச் செய்வதும் அதே தூய ஆவியார்தான். அருட்பணியில் துறவியரை-குருக்களை திருநிலைப்படுத்தி அரும்பணியாற்றிடச் செய்பவரும் தூய ஆவியாரே. திருமண உடன்படிக்கையில் ஆணையும்-பெண்ணையும் இணைக்கும் இணைப்பாளரும் தூய ஆவியாரே. நோயிலும்-பிணியிலும்-ஆபத்திலும் ஆறுதல் அளித்துக் காப்பவரும், ஆற்றுப்படுத்துபவரும் தூய ஆவியாரே. தூய ஆவியாரின்றி அருட்சாதனங்களில் அருள் இல்லை-ஆற்றலும் இல்லை.

**செபவாழ்வில் தூய ஆவியார்**

செபத்தின் இரு துருவங்களான செபிப்போரையும்-செபத்தைக் கேட்கும் இறைவனையும் இணைக்கும் பாலமே தூய ஆவியார். அவர் இருபக்கமும் செயல்படுபவர். நமது பெரு மூச்சாகவும் இறைத்தந்தையிடம் சேர்த்து, அருள் வரங்களைப் பெற்றுக் கொள்ள நம்மை வழிநடத்திச் செல்பவர் தூய ஆவியார். திருத்தூதர்கள் செபத்தைக் கேட்டு விலங்குகளைத் தகர்க்கச் செய்த, முடவனை நடக்கச் செய்த, மக்களை ஓரினமாக்கிய, பொதுச் சொத்துக் கொள்கையை உருவாக்கிய, சிதறிய மக்களை சீர்ப்படுத்திய, பல்வேறு திசைகளிலும் திருத்தூதர்களை அனுப்பி இறையாட்சியை நிறுவச் செய்த, அதே தூய ஆவியார் நம் செபங்களையும் கேட்கின்றார்-தந்தையிடம் சேர்க்கின்றார்-அருளைப் பெற்று வழங்குகின்றார். (உரோ 8: 26-27)

**தூய ஆவியார் அருளும் உரிமை வாழ்வு**

கடவுளின் திட்டத்திற்கு நம்மை அர்ப்பணித்து வாழவே தூய ஆவியாரின் அருள் (எபே 1:5-6) நம்மில் பொழியப்படுகின்றது. தூய ஆவியாரின் ஆற்றலால் நாம் கடவுளை "அப்பா" என உரிமையுடன் (உரோ 8:15) அழைக்கின்றோம். அந்த உரிமையில் பங்காளிகளாகவும் (உரோ 8:17) உரிமைப்பேறு பெறுகின்றோம். எனில், அந்தப் பெறும் பேற்றை இறுதிவரை காத்திட நாம் முன்வரவேண்டும். அதற்கு தூய ஆவியாரின் அருளை நாம் நாள்தோறும் நாடிச் செல்வோம்.

இறைவனால்-இறைமகனால் அனுப்பப்பட்டவர்
இறைவாழ்வு தந்திட வந்தவர்
நற்செய்திக்குத் துணையாக நின்றவர்
நல்லதைச் செய்திடத் தூண்டுபவர்

இறைமகனை நல்வழியில் நடத்தியவர்
ஏதுமற்ற பாழ்வெளிக்கு இட்டுச் சென்றவர்

கல்வாரி முகடுவரை அழைத்துச் சென்றவர்
கனிவுடன் வாழ்ந்திட வழிவகுத்தவர்

திருச்சபையில் நிரந்தரமாய்க் குடிகொண்டவர்
திருத்தந்தையை தினமும் வழிநடத்துபவர்
திருமறையின் ஈடில்லாக் காப்பாளர்
திருவாழ்வை ஈந்திடும் சீராளர்

அருள்வாழ்வின் அடையாளம் அருள்பவர்
அருங்கொடைகளை அன்றாடம் அளிப்பவர்
அமைதிசால் நல்வாழ்வை நாடுபவர்
அன்பையும் நட்பையும் வளர்ப்பவர்
ஆற்றலால் நம்மை நாளும் நிரப்பிடும்
தூய அவியார் புகழைப் பாடி மகிழ்வோம்.
அவர்தம் துணையை நாடிப் பெறுவோம்
அருள்வாழ்வில் நிறைவைக் காண்போம்.

தூய ஆவியாரின் பெருவிழாவை அர்த்தமுடன் கொண்டாடுவோம். இக்கட்டுரை அதற்கு உதவட்டும்.
தூய ஆவியே எழுந்தருளி வாரும்
உம்மக்கள் எங்களது உள்ளங்களை நிரப்பும்
அவற்றில் அன்புத் தீ பற்றியெறியச் செய்யும். ஆமென்.

## சகாய அன்னையின் பக்தியும் வரலாறும்

திரு. ஹென்றி ஸ்டீபன்

இரக்கத்தின் அரசியாம் அன்னை மரியாள்மீது நாம் வைக்கும் நம்பிக்கை பெரிதாக இருக்க வேண்டும். மகன் ஓர் அரசன் என்றால், அவரைப் பெற்றெடுத்த அன்னை அரசி என்னும் ஆட்சிக்குரியவள் என்றும் நியாயப்படியும், உண்மையிலும் கருதப்பட தக்கவரே என்று புனித அத்தனாசியார் கூறுகிறார். திருச்சபையும் அன்னையை அரசி என்ற உன்னதப் பெயரால் மகிமைப்படுத்துகிறது. பாவிகளை மன்னிப்பதில் மட்டுமல்ல, துன்ப துயர வேளைகளில் அவளது அருளையும் துணையையும் வேண்டும்போது பரிவுடன் ஏற்று அரவணைத்து காத்து வருவதால் இரக்கத்தின் அரசி என்று சிறப்பாக அழைக்கப்படுகிறாள். கத்தோலிக்கருக்கு மட்டுமல்ல அனைத்து மக்களுக்கும் அவள்தாயாக விளங்குகிறாள். சிலுவையடியில் தூய யோவானுக்கு இதோ உன் தாய் என்று கூறிய நேரமுதலே எல்லா மனிதருக்கும் தாய் ஆனாள். இதோ இந்நாள் முதல் எல்லா தலைமுறையினரும் என்னை பேறுடையாள் என்று போற்றுமே என்று மரியா கூறியது நிறைவேறிக்கொண்டேயிருக்கிறது.

சகாய அன்னையின் திருநாள் திருத்தந்தை 7ம் பயஸ் (7ம் பத்திநாதர்) என்பவரால் தொடங்கப்பட்டது. அதன் வரலாறு பின்வருமாறு நிகழ்ந்தது.

அன்று மேல்திசை நாடுகள் எல்லாம் நடுங்கி ஒடுங்கிக் கொண்டிருந்தன. மக்கள் அழிவின் வாசலிலே தாங்கள் நிற்பதாக எண்ணி கொலை நடுக்கம் கொண்டனர். கிறிஸ்தவ நகரமே ஆட்டங்கண்டது. ஆம், துருக்கியரின் படையெடுப்பாலும் அவர்களது போர் திறமையாலும் வெற்றிமேல் வெற்றிச்சூடி, நாடுகளையெல்லாம் சூறையாடி தன் ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொண்டு ஐரோப்பிய நாடுகளை நோக்கி முன்னேறிக் கொண்டு வந்ததால் அவைகளை கண்டவர்கள் நிலைகுலைந்து விட்டனர்.

கடலிலே கப்பலோடு கப்பல் மோதின. கடும் போர், லெப்பாந்தோ கடலில் தொன் ஜூவான் தளபதியின் படைகளுக்கும் துருக்கியப் படைகளுக்கும் பெரும் போர் மூளவே யாருக்கு வெற்றி என்ற தவிப்பும், எதிரியின் எண்ணற்ற வீரர்களையும் அவர்களின் பலத்தையும் கண்ட கிறிஸ்துவ உலகத்தினர் சொல்லொண்ணா துன்பம் அடைய கண்ணீர் கண்களிலே மல்க கன்னிமரியின் அபயம் தேடி

கைவிரித்து வேண்டினர். அந்த அவல நேரத்தில் கன்னிமரி அபயம் அளித்தாள். எதிரிகளுக்கு சாதகமாக வீசிய காற்று திடீரென அற்புதவிதமாக கிறிஸ்தவ போர் வீரர்களுக்குத் துணையாக திசைமாறி வீச கப்பல்கள் மோதி சிதறின. தீப்பற்றியெரிந்தன. கிறிஸ்துவ படை துருக்கியரை துரத்தி முறியடித்து வெற்றி வாகை சூடியது. காப்பாற்றிய தாய்மரியை புகழ்ந்தேற்றினர்.

பரிசுத்த திருத்தந்தை 5ம் பத்திநாதரோ தாய்மரி செய்த தன்னிகரற்ற செயலுக்கு நன்றியறிதலாக கிறிஸ்தவர்களின் சகாயமான புனித மரியே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்ற வேண்டுதலால் "லொரெட்டோ" மன்றாட்டு மாலையில் சேர்த்து மகிழ்ந்தார். இவையனைத்தும் கி.பி. 1571ம் ஆண்டிலே நிகழ்ந்தன. ஆண்டுகள் கழிந்தன. மீண்டும் மேல்நாட்டின் வரலாற்றிலே மாபெரும் மாற்றம். மக்களுக்கோ பெரும் ஏமாற்றம் நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக நெப்போலியனின் காலடிகளிலே விழுந்தன. ஐரோப்பா கண்டத்தையே ஆட்டிப்படைத்தான். அன்று திருமறைத் தலைவராக விளங்கிய 7ம் பத்திநாதரை தன் கையப்பாவையாக்க முனைந்தான். தன்னை ஐரோப்பிய பேரரசனாக பிரகடணப்படுத்தினான்.

நெப்போலியனின் ஆணைக்கிணங்க திருத்தந்தை 7ம் பத்திநாதரை ஜீலை 5, 1808 அன்று கைது செய்து மூன்று வருடகாலமாக சவோனா என்னுமிடத்தில் சிறையில் அடைத்து வைத்திருந்தான். 1814ம் ஆண்டு ஜனவரி மாதம் லேபிஸ் (Leifzig) போருக்குப் பிறகு அவரை சவோனாவின் பாதுகாவலியான இரக்கத்தின் அன்னையின் திருவிழா நாளான மார்ச் 17ம் தேதி அன்று விடுதலை செய்தார்கள்.

அங்கிருந்து திருத்தந்தை ரோமிற்கு வெற்றி பயணம் மேற்கொண்டார். அவர் திருச்சபையின் பல இன்னல்களுக்கு பிறகு கிடைத்த இந்த மகத்தான வெற்றியை பறைச்சாற்றும் விதமாக அவர் செல்லும் வழிகள் தோறும் இருந்த தேவ அன்னையின் திரு உருவ சுருபங்களுக்கு கிரீடங்கள் அணிவித்தார்.

நெப்போலியனை தைரியமாக எதிர்கொண்டு வெற்றிப்பெற்ற திருத்தந்தையைக் காண மக்கள் திரளாக வீதிகளில் கூடினர். மே 24, 1814 அன்று ரோம் நகரத்தினுள் வந்த தந்தையை உற்சாகமாக வரவேற்றனர். தானும், திருச்சபையிலுள்ள மற்றவர்களும் அடைந்த துன்பத்தை நினைவுக்கூறும் வகையில் வியாகுல அன்னை திருவிழாவை செப்டம்பர் 18, 1814ம் ஆண்டு கொண்டாடினர்.

கடவுளுக்கும் அன்னை மரியாவுக்கும் நன்றி செலுத்தும் விதமாக செப்டம்பர் 15ம் நாள் 1815அன்று ரோம் நகரத்தில் சகாய அன்னையின் திருநாளை மே 24ம் நாள் அன்று கொண்டாடவேண்டும் என்று உறுதிப்படுத்தினார்.

## இரக்கத்தின் ஆண்டிற்கு மூவொரு இறைவன் தரும் பாடங்கள்

பணி. அந்தோணி கிறிஸ்டி சச.,

நாம் கொண்டாடும் மூவொரு இறைவனின் பெருவிழா ஏதோ ஒரு புரியாத உண்மையை குறித்த ஒரு விழா அன்று. மறையுண்மைகள் (Mystery) என்றாலே யாருக்கும் விளங்காத ஒரு செய்தி என நம்மில் பலர் நினைப்பதுண்டு. ஆனால் மறையுண்மைகள் என்பன கடவுளால் மட்டுமே கூடிய சில உண்மைகள் குறித்த புரிதலாகும். கடவுளால் மட்டுமே ஆகக்கூடிய காரியங்களை கடவுள் ஏன் நிகழ்த்த வேண்டும். ஆராய்ந்து பார்த்தோமேயானால் ஒவ்வொரு மறையுண்மைக்குப் பின்னும் ஒரு ஆழ்ந்தப் பாடத்தை இறைவன் மனிதக் குலத்திற்குத் தருகின்றார் என்பது தான் உண்மை.

அவ்வாறே மூவொரு இறைவன் என்ற மறையுண்மைக்குப் பின்னும் நம் அன்றாட வாழ்வுக்குப் பல பாடங்களைத் தருகின்றார் இறைவன்.

மூவொரு இறைவன் என்பது ஒரே கடவுள் மூன்று ஆட்களாய் இருப்பது. கிறிஸ்தவர்களாகிய நாம் பங்கிலோ, நம் குடும்பங்களிலோ, திருச்சபையிலோ, பலரானாலும், பல பின்புலங்களை கொண்டவர்களானாலும் ஒரே மனதினராய், ஒரே உள்ளத்தினராய் அன்புக் கொண்டு வாழவேண்டும் என்பதே பாடம்.

மூவொரு இறைவன் என்பது தந்தை, மகன், தூய ஆவியாம் இறைவன் மீட்பின் திட்டத்திலே பிரிவினையின்றி, ஏற்றத்தாழ்வுகளின்றி எந்த குழப்பமும் இன்றி இயங்கும் உண்மை. படைப்பின் ஊற்றாய்

தந்தை, தனது ஒரே பேரான மகனாய் அனைத்தையும் புனிதப்படுத்துபவராய் தூய ஆவி என்று மூன்று பணிகள் இருப்பினும் அவர்கள் வெவ்வேறாக இல்லாமல் அதே நேரம் ஒருவரோடு ஒருவர் ஆள்மாறாட்ட குழப்பம் இல்லாமலும் இருக்கிறார்கள் என்று இறையியல் நமக்கு கூறுகிறது. அவ்வாறே நாமும் திருச்சபையிலும், பங்குகளிலும், குடும்பங்களிலும் பிரிவினைகளோ, ஏற்றத்தாழ்வுகளோ, குழப்பங்களோ இன்றி இறைத்திட்டத்தை நோக்கியே செயல்பட வேண்டும் என அழைக்கிறது இவ்வாண்டு.

மூவொரு இறைவனின் தந்தையும், மகனும், தூய ஆவியும் அவரவர் தங்களையே வெறுமையாக்கும் மனநிலையில் ஒன்றித்திருக்கிறார்கள். ஒருவரையொருவர் ஒப்பிட்டு பார்த்து, ஏற்றத்தாழ்வுகள் பாராட்டாமல், நானா, நீயா என்று போட்டியிடாமல் ஒருவர் மற்றவருக்காக தன்னையே வெறுமையாக்கி உறவிலே ஒன்றித்திருப்பதே மூவொரு இறைவன். நாமும் பெயர், புகழ், பதவி, மாலை, கைத்தட்டல், பொன்னாடை, தெருவோர உருவப்படங்கள் என்று நாடி சீரழியாமல் தியாக உணர்வோடு அடுத்தவரின் நலன் கருதுபவர்களாய் வாழ அழைக்கிறது இரக்கத்தின் ஆண்டு.

தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

1. ஏப்ரல் 11,2016 தமிழ்நாட்டின், திண்டுக்கல் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக பேரருள்திரு தாமஸ் பால்சாமி அவர்களை நியமித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். திருச்சி மறைமாவட்டத்தின் முதன்மைக் குருவாக, 2007ம் ஆண்டிலிருந்து 2015ம் ஆண்டு வரைப் பணியாற்றிய, புதிய ஆயர் தாமஸ் பால்சாமி அவர்கள், தற்போது, கல்லுக்குழி புனித அந்தோணியார் ஆலயப் பங்குக் குருவாகப் பணியாற்றி வருகிறார். 2003ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட திண்டுக்கல் மறைமாவட்டம், 6,266 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும், 1,45,213 கத்தோலிக்கரையும் கொண்டுள்ளது. இங்கு 49 பங்குகளும், 163 அருள்பணியாளர்களும், 32 அருள்சகோதரர்களும், 365 அருள்சகோதரிகளும், 42 குருத்துவ மாணவர்களும் உள்ளனர். திண்டுக்கல் மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றிய ஆயர் அந்தோணி பாப்புசாமி அவர்கள், மதுரை உயர் மறைமாவட்டப் பேராயராகப் பணிமாற்றம் பெற்றதைத் தொடர்ந்து திண்டுக்கல் மறைமாவட்டம், 2014ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து ஆயரின்றி இருந்தது.

2. அருளாளர் அன்னை தெரசா புனிதராக உயர்த்தப்படும் திருநிகழ்வு, இவ்வாண்டு செப்டம்பர் 4ம் தேதி ஞாயிறன்று இடம்பெறும் என கர்தினால்கள் அவைக் கூட்டத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்தார்.

3. ஏப்ரல் 11,2016 கேரள மாநிலம், கொல்லம் அருகேயுள்ள புட்டிங்கல் தேவி கோவில் வளாகத்தில், ஞாயிறு காலை 3.10 மணியளவில் இடம்பெற்ற, பட்டாசு வெடி விபத்தில் இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் உறவுகளுக்குத் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். இவ்வெடி விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள மற்றும் மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ள எல்லாருக்காகவும் வல்லமையும் அமைதியும் நிறைந்த இறையாசீர், நாட்டினர் அனைவர்மீதும் பொழியப்படச் செபிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

4. ஏப்ரல் 11, 2016 அருள்பணியாளர் Tom Uzhunnaili அவர்களும், போர் இடம் பெறும் பகுதிகளில் பிணையக் கைதிகளாக, கடத்தி வைக்கப்பட்டுள்ள அனைத்து மக்களும் விடுதலை செய்யப்படுமாறு, அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். குறிப்பாக, ஏமன் நாட்டின் ஏடன் நகரில், கடந்த மார்ச் 4ம் தேதி தீவிரவாதிகள் நுழைந்து 4 அருள்சகோதரிகள் உட்பட 16 பேரைக் கொலை செய்த பின்னர், அங்கிருந்த கேரளாவைச் சேர்ந்த அருள்பணியாளர் Tom Uzhunnaili அவர்களையும் கடத்திச் சென்றுள்ளனர். இதற்கிடையே ஏமனில் அமலுக்கு வந்துள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஐக்கிய நாடுகள் நிறுவனம் இத்திங்களன்று

வரவேற்றுள்ளது. அந்நாட்டில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக இடம் பெற்றுவந்த மோதல்களில் ஆறாயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

5. கடந்த ஒன்பது ஆண்டுகளில் உலகில் திருமுழுக்குப் பெற்ற கத்தோலிக்கரின் எண்ணிக்கை 14.1 விழுக்காடு அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், உலக மக்கள் தொகை 10.8 விழுக்காடு அதிகரித்துள்ளது என்று, Annuario Pontificio 2016ல் கூறப்பட்டுள்ளது. 2005க்கும் 2014ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், மறைமாவட்ட மற்றும் துறவற அருள்பணியாளர்களின் எண்ணிக்கை 4,06,411லிருந்து 4,15, 792ஆக உயர்ந்துள்ளது. இது ஆப்ரிக்காவில் 32.6 விழுக்காடு, ஆசியாவில் 27.1 விழுக்காடு என அதிகரித்துள்ளது. மேலும் இதே கால இடைவெளியில் அருள்சகோதரர்கள் 54,559, அருள்சகோதரிகள் 6,83,000 என்ற அளவில் இருக்கின்றனர் என்றும் அவ்வேடு கூறுகிறது.

6. இந்தியாவின் பீகார் மாநிலத்தில், இந்த ஏப்ரல் மாத்திலிருந்து மதுபான உற்பத்திக்கும், விற்பனைக்கும் தடை விதிக்கப்பட்டிருப்பதை, தலத்திருஅவை அதிகாரிகளும், பெண்ணுரிமை ஆர்வலர்களும் வரவேற்றுள்ளனர். இது குறித்து கருத்து தெரிவித்த பாட்னா பேராயர் வில்லியம் டி சூசா அவர்கள், இந்நடவடிக்கை ஒரு துணிச்சலான முயற்சி, மற்றும் குடும்பங்களுக்கு உண்மையிலேயே ஒரு பெரிய ஆசிர்வாதம், என்று கூறினார். மதுபானத்திற்கு முழுவதும் தடை விதித்திருப்பது, சமுதாயத்தில், குற்ற நடவடிக்கைகளையும், விபத்துக்களையும் குறைப்பதற்கும், குடும்ப மற்றும் சமூக வாழ்வு, சிறப்பாக அமைவதற்கும் வழி அமைத்துள்ளது என்றும் கூறினார் பேராயர் வில்லியம் டி சூசா. பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் அவர்களின் அரசு கொண்டு வந்துள்ள மதுபானத் தடை, இம்மாதம் 5ம் தேதியிலிருந்து அமலுக்கு வந்துள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டு வருவாயில் ஏறக்குறைய 75 கோடியே 20இலட்சம் டாலர் இழப்பு ஏற்படும் என்று ஊடகங்கள் கூறுகின்றன. எனினும், குடும்பங்களில், வறுமை, வன்முறை, மற்றும் நச்சரிப்புக்களுக்குக் காரணமாகும் மதுபானங்களுக்கு முழுவதுமாகத் தடை விதித்திருப்பது அம்மாநிலத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது என்று கூறப்படுகிறது.

## Rlh; thrfh; Nghl;b 22 KbTfs;

1. லூக்கா 16:16
2. இயேசுவின் சீடர்கள்
3. மன்னிப்பு
4. 1938
5. எகிப்தின் அலெக்சாந்திரியா திருச்சபை
6. யோவன் மாற்கு
7. திருத்தந்தை 12ம் பத்திநாதர்.
8. 1504 முதல் 1572 வரை
9. செபமாலை
10. புரணி
11. திவிவிலியத்தை தினந்தேறும் வாசித்து, தியானித்து, செபிப்பவர்களாக இருக்க வேண்டும்.
12. உயிர்ப்பு ஞாயிறுக்கு அடுத்த ஞாயிறு, 2000வது ஆண்டு நிறுவப்பட்டது.
13. சலேசிய சபையைச் சேர்ந்த துறவிகள், ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவில் நூற்றுக்கணக்கான சிறுமியரை, சிறார் தொழில் மற்றும் சிறார் திருமணம் என்ற கொடுமைகளிலிருந்து காப்பதாக கூறினார்.

14. பல்சமய உரையாடல்

15. கசிமிராவ்ஸ்கி

விடை எழுதி பரிசு பெறும் வெற்றியாளர்கள்

**md;G epiw thrfh;fNs!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை மே 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும்.
(சரியான முகவரியை குறிப்பிடவும்)

## சுடர் வாசகர் போட்டி - 23

1. rNyrpa rigapd; ghJfhtyp vd;W miof;fg;gLtJ ahH?
   fpwp];jtHfspd; rfha md;id
2. ve;j E}ypd; %d;whk; mj;jpahaj;jpy; J}a Mtpaiug; gw;wp njupe;Jf;nfhs;syhk; vd;W Mrpupau; $Wfpwhu;?
   gjpy; : Catechism of the Catholic Church
3. "ePq;fs; Cdpay;Gf;F Vw;g thohky;> J}a Mtpapd; J}z;LjYf;Nfw;g thOq;fs;". $wpaJ ahu;?
   gjpy; : J}a gTy;.
4. J}a gpypg;G jpUkzkhdtuh? my;yJ jpUkzkhfhjtuh?
   gjpy; : jpUkzkhdtu;
5. fpwp];jtHfspd; rfha md;id vd;w jiyg;ig Kjypy; gad;gLj;jpatH njhd; Ngh];Nfh: rhpah? jtwh?
   jtW
6. Xt;nthU gj;Jkzpapd; KbtpYk; ve;j nrgj;ij nrgpf;Fk; gb md;id Nfl;Lf; nfhz;lhu;?
   gjpy; : X vd; ,NaRNt .....
7. cwTfspd; Cw;W ahH vd;W MrphpaH $Wfpwhh?
   J}a MtpahH
8. ,e;j Vg;;uy; kjj;jpy; kJghd cw;gj;jpf;Fk;> tpw;gidf;Fk; KOikahd jilia tpjpj;jpUf;Fk; khepyk; vJ?
   gjpy; : gPfhu;
9. neg;Nghypad; ve;j jpUj;je;ijia rpiwgpbj;J rNthdh vd;w ,ilj;jpy; itj;jhd;?
   gjpy; : jpUj;je;ij 7Mk; ga]; (gj;jpehju;)
10. njhopyhsuhd J}a NahNrg;G vd;W mwptpj;j jpUj;je;ij ahu;?
    gjpy; : jpUj;je;ij 12Mk; gj;jpehju;.
11. ghj;jpkh md;id %d;W Foe;ijfSf;F ve;j ehs; Kjy; ve;j ehs; tiuj; Njhd;wpdhs;?
    gjpy; : 13.5.1917 Kjy; 13.10.1917 tiu Njhd;wpdhs;.
12. jpUj;je;ij gpuhd;]p]; jpz;Lf;fypd; Gjpa Mauhf ahiu epakpj;Js;shu;?
    gjpy; : NguUs; jpU jhk]; ghyrhkp
13. J}a Mtpapd; tuq;fs;> fdpfs;> nfhilfs;> gw;wp jpUtptpypaj;jpy; vq;F gbf;fpd;Nwhk;?

gjpy; : tuq;fs; 1nfhup 12: 8-10
fdpfs; fyhj; 5: 22
nfhilfs; vrhah 11: 2-3

14. J}a gpypg;G vj;jid Mz;Lfs; irj;jpupahtpy; ew;nra;jp mwptpj;jhu;?
gjpy; : 20 Mz;Lfs;.

15. ,NaRit md;id kupahSf;Fs; fUthf;fp> cUthf;fp> kDthf;fpaJ ahu; vd;W Mrpupau; $Wfpwhu;?
gjpy; : J}a Mtpahu;.


**தீபகச் சுடர்**

md;G thrfh;fNs!

இம்மாதம் முதல் அஞ்சல் துறையின் சில விதிமுறைகள் காரணமாக ஆண்டுச் சந்தாவை ரூ. 100 ஆக உயர்த்தியுள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். மாதம் தவறாமல் ஒரு பிரதிப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/- செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**jPgfk**

தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்: ...............................
முகவரி: ...............................
.........................................
…........................................
...........................................


அடுத்த சுடரில்

பகுதி - 1 வழிபாட்டு வழிகாட்டி

பகுதி - 2 விசுவாசத்தில் வளர...